# இயேசுவினுடைய மனிதத்துவத்தின் கொடுமுடி: அவரது மரணமும் உயிர்த்தெழுதலும்

இயேசுவினுடைய மனிதத்துவத்தின் கொடுமுடியாக இருந்தது என்ன? இயேசு ''முழுமையும் மனிதரா''யிருந்த வகையில் அவரது ஜெப வாழ்வும், கல்வாரியில் அவரது மரணமும் இரண்டு மாபெரும் உதாரணங்களாயிருந்தனவென்று நாம் ஆலோசித்திருந்தோம். ஜெபம் என்பது பெயர் குறிப்பிடத் தகுதியானது என்ற விஷயமும் நாம் மரணத்தை எவ்வளவு வினயமாய்க் கண்ணோக்குகின்றோம் என்ற விஷயமும் வெறும் மனிதத்துவத்தின் சார்ந்திருப்புத் தன்மை மற்றும் போதுமற்ற தன்மை ஆகியவற்றுக்கு ஆதாரங்களாய் இருக்கின்றன. ஜெபத்தில் நாம் சார்ந்திருப்பவரின் சித்தத்தைத் தேடுகின்றோம்; மரணத்தில் நாம் அழியாமையைக் கடந்து அவருக்குள் இருக்கும் ஜீவனை எதிர் நோக்குகின்றோம்.

வேத வசனங்களில் நாம், இயேசு ஜெபிப்பதைக் கேட்டும், அவர் சிலுவையில் மரித்ததைப் பார்த்தும் இருக்கின்றோம். இந்த அனுபவங்கள் இயேசுவின் உண்மை மனிதத்துவத்தை நாம் நம்பும்படி செய்கின்றன. அவர் சிலுவையில் இருந்து, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கை விட்டீர்?" (மாற். 15:34) என்று கதறிய பொழுது, எப்படி ஜெபிப்பது என்று நமக்குப் போதிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளாதிருந்தார். நீங்களும் நானும் அறிந்து கொள்ள முடியாத உணர்வுப் பூர்வமான பெரும் துக்கத்திலிருந்தும் சரீரவாதையிலிருந்தும் அவர் கூப்பிட்டார். நாம் அதைப் புரிந்து கொள்ள முடியாது, ஏனென்றால் நாம் அங்கு ஒருபோதும் இருந்ததில்லை, ஒருக்காலும் இருக்கப் போவதில்லை, அங்கு இருக்கவும் நம்மால் முடியாது. சிருஷ்டிகரே சிருஷ்டியானது போன்ற அவ்விதத்தில் நாம் ஒருக்காலும் இருந்ததில்லை. மனிதராவதற்கு தெய்வீகத்துமானவர் அந்த மகிமையைத் தாமே வெறுமையாக்கின நிலையில் நாம் ஒருக்காலும் இருந்ததில்லை. நீங்களும் நானும் நற்குணமுள்ள வாழ்வு வாழ்ந்து, வேதனை நிறைந்த மரணத்தில் இறக்கலாம்; ஆனாலும் நாம் ஒருக்காலும் பாவமற்ற வாழ்வை வாழ்வ தில்லை, மற்றும் நாம் நம்மையே பரிபூரணமான பலிகளாக ஒருக்காலும்

ஒப்புவிக்கப் போவதில்லை. மற்ற எவரும், இயேசுவைப் போல் விட்டு விடப்பட்டு, முற்றான தனிமையில் சிலுவையில் தொங்கி, கடும் வேதனையான சித்திரவதையை அனுபவிப்பதில்லை.

வாழ்ந்தவற்றிலேயே மிக முழுமையான முன்மாதிரி வாழ்வை இயேசு வாழ்ந்தது மட்டுமின்றி (எபி. 4:15; 1பேது. 2:22), எவரொருவரும் மரித்ததைக் காட்டிலும் மிகவும் முற்றான அவமானம் உண்டாக்கும் மரணத்தையும் அவர் அடைந்தார் (2 கொரி. 5:21). இயேசு ஒரு மனிதர் என்ற வகையில் தம் ஊழியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வாழ்வின் மிகவும் மேன்மைப் படுத்தப்பட்ட அனுபவமும், மரணத்தில் மிக அதிகமான வேதனையுள்ள அனுபவமும் தேவைப்பட்டன. அவர் நாம் பின்பற்றுவதற்கு ஒரு உதாரணத்தை அமைப்பதற்காக மட்டும் இப்பூமிக்கு வந்தவரல்ல (1 பேது. 2:21). அல்லது அவர் நமக்கு ஜீவனுக்கேற்ற ஆச்சரியமான வசனங்களைப் போதிக்க மட்டும் வரவில்லை (யோவா. 6:63). இயேசு தாமே, "உலகத்தை ஆக்கினைக்குள்ளாக்குத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா. 3:17) என்று கூறினார்.

பிறப்பு, வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் அவரது ஊழியத்திற்குத் தேவைப்பட்டன. அவர் தம் ஊழியத்தை நிறைவேற்ற, அவரது பிறப்பு இணையற்றதாயிருக்க வேண்டியதாயிற்று, அவரது வாழ்க்கை குறையற்றதாயிருக்க வேண்டியதாயிற்று, மற்றும் அவரது மரணம் மிகக் கொடுமையான உண்மையாய் இருக்க வேண்டியதாயிற்று. பூமியில் இயேசு வாழ்ந்த வாழ்வின் எல்லா அம்சங்களிலும் இங்கு வாழ்ந்திருந்த மனிதர்களிலேயே மிகவும் மேன்மையான மனித இயல்பை அவர் ஒளி வீசச்செய்தார். அவர் முழுமையானவராக/பூரணப்பட்டவராக இருந்தார் - ஏனென்றால் அவர் "பாதி - தேவனாக" இருந்ததால் அல்ல, ஆனால் அவர் உண்மையில் மனிதராயிருந்தும் கறை அல்லது குற்றம் எதுவும் இல்லாத வாழ்க்கை வாழ்ந்ததினாலேயே அப்படியானார். பிறப்பு முதல் மரணம் வரையிலும் மிக மேன்மையான வாழ்க்கை மட்டுமின்றி பாவமற்ற வாழ்க்கையும் வாழ்ந்தவர் மனித வரலாறு முழுவதிலும் இயேசு ஒருவரே ஆவார்.

## அவரது மரணம்

தனிப்பட்ட முறையில் பரிசுத்தமும் சமாதானமும் நிறைவும் கொண்ட இந்த இயேசுவால், இழந்து போகப்பட்டவர்களை இரட்சித்தல் என்ற தமது ஊழியத்தை எவ்விதம் வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது? அதுவே கெத்செமெனேயின் முக்கிய கூறாக இருந்தது. அவர் தமது பிதாவின் சித்தத்தைச் செய்வதற்குச் சித்தமாயிருந்தார்: "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே;" (1 தீமோ. 2:5, 6அ). இயேசு, "அப்படியே, மனுஷகுமாரனும்

*ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற். 10:45) என்று கூறினார்.*

*இப்படிப்பட்ட ஒரு தூய்மையான மற்றும் அன்புக்குரிய நபரைப் பலியிட வேண்டியது ஏன்? - மற்றும் அந்த மரணம் அவ்வளவு கொடியதாகவும் கொடூரமாகவும் இருக்க வேண்டியது ஏன்? ஏனென்றால் அது தேவனுடைய உயர்த்தப்பட்ட பரிசுத்த தன்மையாகும். ஏனென்றால் அது மாற்றப்பட முடியாத முற்றிலுமான நீதியினால் ஆனதாகும். அவரது பரிசுத்த தன்மை பாவத்தை வெறுத்தது; அவரது நீதியானது ஒவ்வொரு பாவமும் தண்டிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றது. தப்பிக் கொள்ளும் வழிகள் எதுவும் இல்லாதிருந்தது. தேவன், அன்பு மற்றும் சகிப்புத் தன்மை என்ற கொள்கையின் அடிப்படையில் தனது குழந்தைகளின் தவறான காரியங்களை ஒதுக்கிப் பார்க்கும் மனம் போன போக்குடைய பெற்றோரைப் போன்றவர் அல்ல. இதற்கு மாறாக, "... எந்த ... கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத் தக்கதாக" (எபி. 2:2ஆ) அவர் இருக்கின்றார் என்று பழங்காலத்திலிருந்தே நமக்குக் கூறப் பட்டுள்ளது; மற்றும், "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே" (எபி. 10:28). புதிய ஏற்பாட்டில், "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி. 9:27) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. பாவம் என்பது ஆபத்தானது; அது மன்னிக்கப்படவில்லை யென்றால் மரணத்திற்கு ஏதுவாகின்றது.*

*முற்றிலும் பரிசுத்தமான தேவனால் கேட்டுக் கொள்ளப்பட்ட நீதியின் நிறைவேறுதலானது குறை கூறப்பட முடியாத கிறிஸ்துவின் முழுமையான பலியினால் அன்றி வேறு எதினாலும் நமது பாவங்களை மன்னிக்கக் கூடாதிருந்தது. ஆகையால் தேவனுடைய குமாரன் தமது பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்குத் தம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்து, மீட்கும் பொருளைச் செலுத்தினார். தேவனுடைய நீதி நிறைவேற்றப்பட்டதற்குக் கேட்டுக் கொள்ளப்பட்ட அளவிட முடியாத அப்படிப்பட்ட தகுதியுடைய ஒரு பலியை அவரது உடலும் இரத்தமும் (அவரது ஜீவனை) கொடுத்தன. இந்த ஈவை ஏற்றுக் கொள்கின்றவர்களை பிதாவானவர் மன்னிக்கும் போது அவரது முழு இயல்புக்கும் முற்றிலும் இசைவுடைய தன்மை அப்படியே தக்க வைத்துக் கொள்ளப்பட்டது. "நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" (யாக். 2:13ஆ).*

*இயேசு மரித்துக் கொண்டிருக்கையில், "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே"; "முடிந்தது!"; "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக். 23:34; யோவா. 19:30; லூக். 23:46) என்று கூறினார். "முடிந்தது!" ஒருவேளை இந்த வார்த்தைகளின் முழுமையான தனிச் சிறப்பை உணர்ந்து கொள்வது என்பது மனிதரின் மனதினால் இயலாததாக இருக்கலாம். இருப்பினும் இயேசு அதை அறிந்தார்; தாம் பாடுபட்ட பயங்கரமான மரண அடிகளிலும் கூட, அவர் அமைதியுணர்வுடன்*

*மரித்தார். இப்பொழுது, கடனாய்ப் பெறப்பட்ட ஒரு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுதலில் தொடங்கி அவரது பிதாவின் இல்லத்திற்குச் செல்லும் பயணம் மட்டுமே எஞ்சியிருந்தது. அவரது மனிதத்துவமானது அதன் எல்லைகள் வரையிலும் நீட்டிக்கப்பட்டது. அவரது பிறப்பே மகிமையுடையதாக இருந்தது (லூக். 2:6, 7, 13, 14). அவரது வாழ்வு மிக மேலான தூய்மையுள்ளதாய் இருந்தது. அவரது மரணம் அவரது வெற்றியாயிருந்தது என்பது தன்னில்தானே எதிரிடையாகத் தோன்றும் உண்மையாகும். அவர் தமது பிதாவின் சித்தத்தைச் செய்யவே வந்திருந்தார் (யோவா. 6:38), அவர் அதைச் செய்திருந்தார்!*

## அவரது உயிர்த்தெழுதல்

*இயேசுவின் உயிர்த்தெழுதல் அவரது மெய்ப்பாடு ஆகும் - என்ன ஒரு உயிர்த்தெழுதல்! மனிதக் காதுகளால் கேட்கப்படாமல், மனிதக் கரங்களால் தொடப்படாமல், மனிதக் கண்களால் காணப்படாமல், மனித மனங்களால் அரிதாகவே உணரப்படும் வகையில் இயேசு ஜீவனுள்ளோருடைய தேசத்திற்குத் திரும்பினார்.*

*அவரது உயிர்த்தெழுதல் மற்றும் அவரது பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தில் அவர் நூற்றுக்கணக்கான மக்களால் காணப்பட்டார் (1 கொரி. 15:1-8). இயேசுவின் உயிர்த் தெழுதலுக்குப் பிறகு அவருடைய தரிசனங்களில் பல மனிதரின் கண்ணோட்டம் என்ற கருத்தில் புதுமையின் மெல்லிய திரையினால் உடுத்தப்பட்டதாக உள்ளன. சில உதாரணங்களைக் கவனியுங்கள். ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் இன்னமும் இருட்டாயிருந்த போதே மகதலேனா மரியாள் இயேசுவைப் புதைத்திருந்த இடத்திற்குச் சென்றாள். கல்லறை திறந்திருந்ததை அவள் கண்ட பொழுது, அவரது சரீரம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது என்று அவள் நினைத்தாள். அவள் அழுது கொண்டிருந்த போது இயேசு அவளுக்குத் தரிசனமாகி, அவளுடன் பேசினார். அவர், ''என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், 'நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு' என்றார்" (யோவா. 20:1-18ஐ வாசிக்கவும்). இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டார் என்று பெண்களின் குழு ஒன்று பதினோறு அப்போஸ்தலர்களிடம் கூறிய பொழுது, "இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீண் பேச்சாகத் தோன்றினதினால், அவர்கள் இவர்களை நம்பவில்லை'' (லூக். 24:6-11ஐ வாசிக்கவும்). வெறுமையாயிருந்த கல்லறையைக் கண்ட பிறகும் கூடப் பேதுரு, "சம்பவித்ததைக் குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக் கொண்டு போனான்" (லூக். 24:12ஆ). அதே நாளின் பிற்பகுதியில், இரண்டு மனிதர்கள் இயேசுவுடன் உணவு உண்டார்கள். அவர்கள் முதலில் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை; அவர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டவுடன்*

*அவர் மறைந்து போனார் (லூக். 24:13-31). இதற்குச் சற்றுப் பிறகு, எருசலேமில் அப்போஸ்தலர்களுடன் கூடியிருந்தவர்களுக்கு இயேசு தரிசனமானார். "அவர்கள் கலங்கி, பயந்து ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள்." அவர் தமது கைகளிலும் கால்களிலும் இருந்த சிலுவையில் அறையப்பட்ட தழும்புகளை அவர்களுக்குக் காண்பித்து அவர் தாம் மாம்சமும் இரத்தமும் உடையவராய் இருந்ததையும் தாம் ஒரு (வெறும்) ஆவியல்ல என்பதையும் அவர்களுக்கு உறுதிப் படுத்தினார் (லூக். 24:36-43).*

*ஒரு வாரத்திற்குப் பிறகு கதவுகள் பூட்டப்பட்டிருந்த ஒரு அறையில் இருந்த தமது அப்போஸ்தலர்கள் யாவருக்கும் இயேசு தரிசனமானார். இதற்கு முன்பு இயேசு தரிசனமாகியிருந்த பொழுது தோமா அவர்களுடன் இல்லாதிருந்தார். அவர் (தோமா) இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய தமது நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியிருந்தார். இப்பொழுது அவர்களுடன் அவர் இருந்தார். இயேசு அவரிடத்தில் பேசினார்: " 'நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு' என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக 'என் ஆண்டவரே! என் தேவனே!' என்றான்" (யோவா. 20:27, 28).*

*கலிலேயாவில் இயேசு அப்போஸ்தலர்களுக்குக் குறித்திருந்த மலையில் இயேசு அவர்களுக்குத் தரிசனமாகி, பிரதான கட்டளையைக் கொடுத்த பொழுது, "அவர்கள் அவரைக் கண்டு பணிந்து கொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள்" (மத். 28:16, 17). உயிர்த்தெழுதலுக்குப் பிந்திய காலத்தின் போது இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு நாற்பது நாளளவும் தரிசனமானதாக லூக்காவின் சுவிசேஷத்தில் நாம் வாசிக்கின்றோம். அப். 1:3ன்படி நம்ப வைக்கும் பல ஆதாரங்களுடன் அவர் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். கடைசியாக, அவர்களை அவர் ஒலிவ மலைக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் (லூக். 24:51).*

*இந்த நிகழ்ச்சிகளில் பல புதுமையின் மெல்லிய திரையினால் உடுத்தப்பட்டவை என்று நாம் ஏன் கூறினோம்? இது இயேசுவின் உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொள்வதில் சீஷர்கள் சிரமம் பெற்றிருந்தார்கள் என்பதாலா? பலர் அதைக் கடினமாக உணர்ந்தார்கள் என்பது தெளிவே, ஆனாலும் அது எதிர்பாராதது அல்ல. உயிர்த்தெழுதலின் இறையியலை ஒரு உபதேசமாகக் கலந்துரையாடுவது சுலபமானதாக இருக்கலாம்; அது நேரடியான ஒரு நிகழ்ச்சி என்ற கருத்துவாக்கம் செய்வது அவ்வளவு சுலபமானதல்ல. உயிர்த்தெழுதல் என்பது எந்த ஒரு சொந்த அனுபவத்தின் அடிப்படையிலும் நாம் உறவு படுத்திக் காண முடியாத பாதாள உலகின் பரிமாணமாய் உள்ளது. இயேசு தரிசனமான பொழுது அவரது பின்பற்றாளர்களில் சிலர் பயமடைந்தார்கள் என்பது வினோதமாயிருந்ததா? இல்லவே இல்லை. ஒரு சில நாட்களுக்கு முன்பு சிலுவையில் அறையப்பட்டு, புதைக்கப்பட்டவராக நீங்கள் கண்ட ஒருவர் உங்கள் முன்னால் நிற்பதை நீங்கள் காணும் பொழுது ஏற்படும் செயல் விளைவை யோசித்துப் பாருங்கள். உங்கள் முன்பு உயிருள்ள நபராக நிற்பவர் நீங்கள்*

கண்ட மரித்து அடக்கம் பண்ணப்பட்ட அதே நபர் தான் என்றால், நீங்கள் உறுதியாகவே "மறு உலகத் தன்மை"யின் சூழ்நிலையொன்றை உணர் வீர்கள். இவர் "அப்பாலிருந்து திரும்பி வந்த" நபர் என்று நீங்கள் அறிவீர்கள். புதுமையான ஏதோ ஒன்று நடந்தது என்று நீங்கள் அறிவீர்கள்.

இயேசுவின் உயிர்த்தெழுதல், அதைத் தொடர்ந்த அவரது தரிசனங்கள் ஆகியவற்றைச் சுற்றி வழக்கமற்றது ஏதோ ஒன்று சுழன்றது. அப்போஸ்தலர்கள் தங்களின் மாறுபட்ட செயல்பாடுகளினால் இதைச் செயல் விளக்கப்படுத்தினார்கள். மேலும் இயேசுவும் தமது சொந்த வார்த்தைகள், செயல்பாடுகள் மற்றும் தரிசனங்கள் ஆகியவற்றால் இந்தச் சூழ் நிலைக்குப் பங்களித்தார். அவர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின், "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை" (யோவா. 20:17) என்று கூறினார். பேதுருவிடம் அவர் யோவானைப் பற்றி, "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன?" (யோவா. 21:23ஆ) என்று கூறினார். அவரது தரிசனங்கள் பெரும்பாலும் அசாதாரண சூழ்நிலைகளிலேயே இருந்தன. இதற்கு முன்பு இயேசு ஒருபொழுதும் மூடப்பட்ட அல்லது பூட்டப்பட்ட கதவுகளின் மூலம் தோன்றியதோ அல்லது மறைந்ததோ இல்லை. சில வேளைகளில் அவர் சுலபமாய் அடையாளம் காணப்பட முடியாதவராயிருந்தார். நிகழ்ச்சிகள் ஒரு வினோதமான/புதுமையான திருப்பத்தை எடுத்துக் கொண்டன.

இயேசுவின் பூமிக்குரிய பயணம் நிறைவடைந்தது. என்ன ஒரு நிகழ்ச்சி! என்ன ஒரு வாழ்வு! என்ன ஒரு மீட்பர்! தேவனுடைய வினைத் திறன் பற்றி நீங்கள் எப்பொழுதாவது கவனித்திருக்கின்றீர்களா? எங்கும் நிறைந்தவராய் இருக்கும் தேவன் எவ்விதம் "உலகத்தில் வந்து" இங்கு சில "காலம்" கழித்து விட்டு, மற்றும் அதே வேளையில் அவர் எப்பொழுதும் பிரசன்ன மாயிருக்கும் நித்தியத்திற்குத் திரும்ப முடிந்தது? இதை அவர் தமது படைப்பின் சமநிலையைக் கலைத்து விடாமல் செய்ய முடிந்தது எப்படி? அவர் நமது வான மண்டலத்திலும் பூமியின் மீதும் ஏற்படும் பிரளயக் கொந் தளிப்புக் குவியலின் மீதும் அவைகளுக்குக் காரணமாயிராதது போல தமது எல்லையற்ற வல்லமையை எவ்விதம் தமக்குள் "அடக்கிக்" கொண்டிருக்க முடிந்தது? இயேசு கிறிஸ்துவில் இவைகளுக்குப் பதில் காணப்படுகின்றது, ஏனெனில் "தேவன் கிறிஸ்துவுக்குள் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார்" (2 கொரி. 5:19).

இந்த மகிமையான நிகழ்ச்சி எவ்விதம் நிறைவேற்றப்பட்டது என்பதை நாம் கவனிக்கையில், கிறிஸ்துவின் வாழ்வில் இரு மாபெரும் மாற்ற நிகழ்வுகள் இருப்பது உறுதி என்பதை நாம் நோக்குகின்றோம். இதில் முதலாவது, தெய்வீகத்திலிருந்து மனிதத்துவத்திற்கு மாறியது வலியுறுத்தம் பெற்றதாக இருந்தது. குழந்தையான இயேசு தூதர்களின் கீதங்களின் ஒலிகளுக்கு மத்தியில் வந்து சேர்ந்தார், ஆனால் துணிகளினால் சுற்றப்பட்டு முன்னணையில் கிடத்தப்பட்டார். அவர் கன்னிப் பெண்ணிடமிருந்து பிறந்தார், ஆனால் யோசேப்பின் குமாரன் என்று எண்ணப்பட்டார்.[1] அவரது வாழ்க்கை முழுவதிலும் அவர் அவ்விதமாகவே எண்ணப்பட்டார்.

*தெய்வீகத்துவமானது மனிதர் என்ற வகையில் உருக் கொண்டிருந்தது. திரு அவதாரம் என்பது உண்மையானது. பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார் (பிலி. 2:5-8).*

*இரண்டாவது மாற்ற நிகழ்வானது, மனிதத்துவத்திலிருந்து தெய்வீகத்துவத்துக்கு மாற்றத்தின் வலியுறுத்தமாக இருந்தது. அவரது மனிதத்துவமானது அவரது தெய்வீகத்துவத்தை மூடி மறைத்திருந்தது. இந்த மாற்றத்தின் "புதுமைத் தன்மை"யின் மத்தியில், தூக்கப்பட்ட திரையின் வழியாக/மூலமாகக் கடைசியாகத் தோமாவினால் அவரைக் காண முடிந்தது. அவர் "என் ஆண்டவரே! என் தேவனே!" (யோவா. 20:28) என்று இயேசுவிடம் பேசினார். இது ஒரே ஒரு மனிதருடைய அறிக்கைதானே என்று நீங்கள் கூறலாம். அது உண்மையே ஆனாலும் மனிதருக்குத் தேவன் தம்மையே வெளிப்படுத்தியதில் இது வரலாற்றுப் பூர்வமானதாக, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக, மனிதரின் உணரும் திறமையில் ஒரு திருப்பு முனையாக, மற்றும் அந்த வெளிப்படுத்துதலின் தனிச் சிறப்பினுடைய அறிக்கையாக உள்ளது.*

*இந்த மாற்ற நிகழ்வானது பரத்துக்கேறுதலில் நிறைவாக்கப்பட்டது. இயேசு மறுபடியும் உயிருள்ளவராக ஒருபோதும் காணப்படாதபடி திடீரென்று ஒரே நாளில் மறைந்து போய் விடவில்லை. அவர் தம்முடைய அப்போஸ்தலர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில், "அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது" (அப். 1:9). இவ்விதமாக மனிதத்துவத்திலிருந்து தெய்வீகத்துவத்திற்கு மாற்றம் பெற்ற வலியுறுத்தம் முடிவுற்றது.*

*நம்புவதற்கரிய இவ்விரு மாற்ற நிகழ்வுகளும் இயேசு தேவனை விடக் குறைவானவர் என்றோ, மற்றும் அவரது பிறப்பில் அவர் அதிகமாக மனிதத்துவத்தில் (மட்டும்) இருந்தார் என்றோ அல்லது அவரது மரணத்தின் போது அவர் குறைவான மனிதத்துவமும் அதிகம் தேவனுமானார் என்றோ உறுதிப்படுத்துவதில்லை. ஒவ்வொரு மாற்ற நிகழ்விலும் அதிக ஆளுமை செலுத்திய வெளிப்பாட்டின் உறுதி பற்றி மட்டுமே நாம் ஆய்வு செய்துள்ளோம். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுடைய மீட்பின் ஊழியமானது சுய ஆதாரமுடையது போல அவ்வளவு எளிமையானது அல்ல. இருப்பினும், ஒருமுறை புரிந்து கொண்டால், தேவ அன்பு, கிருபை மற்றும் இரக்கம் ஆகியவற்றை அது பிரதிபலிப்பதானது நமது சொந்த வாழ்வை விசுவாசத்திலும், அன்பிலும், நன்றியுடைமையிலும் மற்றும் ஊழியத்திலும் அவருக்கு ஒப்படைக்கச் செய்கின்றது.*

*“திரு அவதாரத்தின் பாடல்” என்று சில வேளைகளில் அழைக்கப் படுகின்ற கீத அறிவிப்பொன்று வேதாகமத்தில் காணப்படுகின்றது, இது “குமாரனாகிய தேவன்” என்ற நமது படிப்பை முடிப்பதற்கு ஏற்றதொரு ஆய்வுப் பொருளாக உள்ளது:*

> *அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப் பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் (1 தீமோ. 3:16).*

---

குறிப்புகள்

[1]*லூக். 1:34, 35; 2:33, 34, 41, 42, 48; 3:23; மத். 13:55, 56; யோவா. 6:42.*